DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.249/2017

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name ரவிக்குமார் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.08.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் உப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் ஒர்க்சாப்பில் வேலை செய்துவருகிறேன். கடந்த 18.2.2017 அன்று 8.00 மணியளவில் வேலைக்கு போய்விட்டு திரும்பி வரும்போது பஸ் ஸ்டாண்டில் உள்ள கறிக்கடையில் கறி எடுத்துவிட்டு நின்றிருந்தேன். அப்போது சரவணன் என்பவர் கறி என்னிடம் கேட்டார். நான் அவருக்கு வாங்கிக் கொடுக்கவில்லை. அதற்கு அவர் என்னை அசிங்கமாக திட்டினார். மறுபடியும் அவர் கேட்டு நான் மறுத்ததால் கடையில் இருந்த அறிவாளை எடுத்து என்னை வெட்டினார். அதில் எனக்கு முகத்தில் வெட்டுக்காயம் ஏற்பட்டு பற்களில் சேதம் ஏற்பட்டது. பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸை வரவழைத்து அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். சிகிச்சையில் இருந்தபோது விசாரிக்க வந்த போலீஸாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார் வாக்குமூலம் தான். அதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆகும்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.